பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

12 09 2024 7 15

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

- அனைவருக்கும் தரமான மருத்துவ சேவைகளை வழங்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியை அதிகரிக்க மத்திய அரசு உறுதி பூண்டுள்ளதாக பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் பூரி தெரிவித்துள்ளார்.
- சிறு குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் வளர்ச்சிக்கு பட்ஜெட்டில் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.
- ஹரியானா சட்டப்பேரவைத் தேர்தல் மற்றும் ஜம்மு காஷ்மீரின் மூன்றாம் கட்ட தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் இன்று நிறைவடைகிறது.
- ஆசிய சாம்பியன் ஹாக்கி போட்டியில் இந்தியா இன்று தென்கொரியாவை எதிர்கொள்கிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

அனைவருக்கும் தரமான மருத்துவ சேவைகளை வழங்க மத்திய அரசு உறுதி பூண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், 70 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் மருத்துவ காப்பீடு வழங்கும் திட்டம் ஆறு கோடி மூத்த குடிமக்களின் சுகாதார பாதுகாப்பை உறுதி செய்யும் என்று கூறியுள்ளார்.

பிரதமரின் மின்சார பேருந்து சேவை திட்டம் தொடர்பான முடிவு பசுமை போக்குவரத்தை ஊக்குவிக்கும் என்று வர் தெரிவித்துள்ளார்.

நீர் திட்டங்கள் தொடர்பான முடிவு, இத்துறையில் மின் உற்பத்தியை மேம்படுத்துவதுடன், முதலீடுகளையும், வேலைவாய்ப்புகளையும் அதிகரிக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமரின் கிராம சாலை திட்டத்தின் நான்காவது கட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள் கிராமப்புற வளர்ச்சியை ஊக்குவிப்பதுடன், உள்கட்டமைப்பை மேம்படுத்தும் என்று அவர் கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

ஆசிய - பசிபிக் மண்டல சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர்கள் மாநாட்டின் நிறைவு நாள் நிகழ்ச்சியில் பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று பங்கேற்கிறார்.

புதுதில்லியில் நேற்று இந்த மாநாட்டை தொடங்கி வைத்து பேசிய சிவில் விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு ராம் மோகன் நாயுடு, 2035-ஆம் ஆண்டுக்குள் ஆசிய – பசிபிக் மண்டலத்தில் உள்ள விமான நிலையங்களில் ஆண்டுக்கு மூன்று புள்ளி ஐந்து பில்லியன் பயணிகளை கையளும் வகையில் உள்கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட வேண்டும் என்றார்.

இந்தியாவில் அடுத்த இரண்டு ஆண்டுகளில் விமான போக்குவரத்து துறையில் மகளிரின் பங்களிப்பை 25 சதவீதம் வரை அதிகரிக்க அரசு முயற்சி மேற்கொண்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இன்று நடைபெறும் நிறைவு நிகழ்ச்சியில் பிரதமர் திரு நரேந்திரமோடி மாநாட்டு பிரகடனத்தை வெளியிட்டு உரையாற்றவுள்ளார்.

இந்த மாநாட்டில் 41 நாடுகளைச் சேர்ந்த 250-க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளனர்.

ஆசிய – பசிபிக் மண்டலத்தில் விமான போக்குவரத்து சேவைகளை மேம்படுத்துவது தொடர்பாக இந்த மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்படுகிறது.

**[]<<<>>>[]**

பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியை அதிகரிக்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் பூரி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் பசுமை ஹைட்ரஜன் தொடர்பான இரண்டாவது சர்வதேச மாநாட்டை நேற்று அவர் தொடங்கி வைத்து பேசினார்.

பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தியை அதிகரிக்க மேற்கொண்டுள்ள முன் முயற்சியை அவர் எடுத்துரைத்தார்.

தற்போதைய உற்பத்தியில் 54 சதவீதத்தை எண்ணெய் சுத்திகரிப்பு துறை மேற்கொண்டு வருவதாக அவர் கூறினார்.

தேசிய பசுமை ஹைட்ரஜன் இயக்கத்திற்காக 19 ஆயிரத்து 744 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் 2030-ஆம் ஆண்டுக்குள் ஒரு லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு புதைப்படிம எரிபொருள் இறக்குமதி குறையும் என்று அவர் தெரிவித்தார்.

பசுமை ஹைட்ரஜன் கொள்கையின் மூலம் அடுத்த ஆறு ஆண்டுகளில் ஐந்து மில்லியன் டன் உற்பத்தி செய்ய இலக்கு நிர்.ணயிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த துறையில் எட்டு லட்சம் கோடி ரூபாய் முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, ஆறு லட்சம் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று திரு ஹர்தீப்சிங் பூரி தெரிவித்தார்.

பெட்ரோலியம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, அறிவியல் தொழில்நுட்பத்துறை ஆகிய அமைச்சகங்கள் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த மூன்று நாள் மாநாட்டில் இந்த துறை சார்ந்த வல்லுநர்கள் பங்கேற்றுள்ளனர்.

[]<<<>>>[]

ஜெர்மன் சென்றுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் அந்நாட்டு பிரதமர் திரு **olaf scholz**-யை சந்தித்து இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து பேச்சு நடத்தினார்.

அந்நாட்டின் பாதுகாப்புத்துறை அமைச்சரையும் திரு ஜெய்சங்கர் சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

ஜெர்மன் பயணத்தை முடித்துக் கொண்டு இன்று ஸ்விட்சர்லாந்து செல்லும் அவர், ஜெனிவாவில் உள்ள சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகளை சந்தித்து ஆலோசனை நடத்தவுள்ளார்.,

ஸ்விட்சர்லாந்து வெளியுறவுத்துறை அமைச்சரையும் சந்தித்து திரு ஜெய்சங்கர் பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

[]<<<>>>[]

சிறு குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் வளர்ச்சிக்கு பட்ஜெட்டில் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

கோவையில் நேற்று தொழில்துறை பிரதிநிதிகளுடன் கலந்துரையாடிய அவர், தொழில் முனைவோருக்கு நேரடியாக சிறு தொழில் மேம்பாட்டு வங்கியின் மூலம் கடன் வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கில் கடந்த மூன்று ஆண்டுகளில் 70 கிளைகள் தொடங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

தமிழகத்தின் கோவையில் தொடங்கப்பட்டுள்ள கிளையின் மூலம் மட்டும் 628 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளதாகவும், இதில் குறுந் தொழில்களுக்கு மட்டும் 103 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாவும் அவர் குறிப்பிட்டார்.

நடப்பு நிதி ஆண்டுக்கான பட்ஜெட்டில் சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டுக்காக அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்களை திருமதி நிர்மலா சீதாராமன் எடுத்துரைத்தார்.

*( சவுண்ட்பைட் - நிர்மலா ) --- 49 செகண்ட்*

**[]<<<>>>[]**

ஹரியானா சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கலும், ஜம்மு காஷ்மீரின் மூன்றாம் கட்ட தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கலும் இன்று நிறைவடைகிறது.

வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை நாளை நடைபெறுகிறது.

ஹரியானா சட்டப்பேரவைக்கு மொத்தம் உள்ள 90 தொகுதிகளுக்கு அடுத்த மாதம் ஐந்தாம் தேதி ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது,

ஜம்மு-கஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் மூன்றாவது மற்றும் இறுதிக்கட்டமாக 40 தொகுதிகளுக்கு அடுத்த மாதம் ஒன்றாம் தேதி வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

இதனிடையே ஹரியானா சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடும் மூன்று பேர் கொண்ட வேட்பாளர் பட்டியலை பிஜேபி நேற்று வெளியிட்டது.

காங்கிரஸ் கட்சி 40 பேர் கொண்ட மூன்றாவது வேட்பாளர் பட்டியலை நேற்று வெளியிட்டுள்ளது.

ஜம்மு-கஷ்மீரில் ஐந்து பேர் கொண்ட வேட்பாளர் பட்டியலையும் காங்கிரஸ் வெளியிட்டுள்ளது.

**[]<<<>>>[]**

இணையவழி விளையாட்டுக்களால் மாணவர்கள் பாதிக்கப்படுவதை தடுக்க பெற்றோர்களும், ஆசிரியர்களும் கண்காணித்து அவர்களை நல்வழிப்படுத்த வேண்டுமென்று தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு முருகானந்தம் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு இணையவழி விளையாட்டு ஆணையம் சார்பில் சென்னையில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பேசிய அவர், குழந்தைகள் தேவையற்ற வகையில் செல்போன் பயன்படுத்துவதை பெற்றோர்கள் முடிந்த வரை தடுக்க வேண்டுமென்று அறிவுறுத்தினார்.

*( சவுண்ட்பைட் - முருகானந்தம் ) -50--- செகண்ட்*

**[]<<<>>>[]**

இஸ்ரேலுடன் போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்படுத்த விரும்புவதாக பாலஸ்தீன ஹமாஸ் அமைப்பு கூறியுள்ளது.

அமெரிக்காவின் வழிகாட்டுதலின் அடிப்படையில் புதிய நிபந்தனைகள் ஏதுமின்றி இந்த ஒப்பந்தத்தை மேற்கொள்ள விரும்புவதாக அமைப்பு தெரிவித்துள்ளது.

தோஹாவில் நடைபெற்ற கத்தார் மற்றும் எகிப்திய சமாதான குழுவினருடனான பேச்சுவார்த்தையின்போது ஹமாஸ் அமைப்பினர் இதனை தெரிவித்தனர்.

**[]<<<>>>[]**

ஆசிய சாம்பியன் ஹாக்கி போட்டியில் இந்தியா இன்று தென்கொரியாவை எதிர்கொள்கிறது.

இப்போட்டி சீனாவின் **hulunbuir**ம-யில் பிற்பகல் மணி 1-15-க்கு தொடங்குகிறது.

இப்போட்டியில் இந்தியா ஏற்கனவே அரை இறுதிக்கு முன்னேறியுள்ளது.

**[]<<<>>>[]**

14-வது தேசிய ஜூனியர் ஆடவர் ஹாக்கிப் போட்டியில் தமிழ்நாடு அணி பத்து-க்கு - இரண்டு என்ற கோல் கணக்கில் குஜராத்தை வென்றது.

ஜலந்தரில் நடைபெற்று வரும் இப்போட்டியில் நேற்று நடைபெற்ற இதர ஆட்டங்களில் தில்லி — கேரளாவையும், கர்நாடகா- ஆந்திராவையும், ஒடிஸா — அஸ்ஸாமையும் வென்றன..

**[]<<<>>>[]**